[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 14

தலைமைப் பொறியாளர் (நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், சென்னை அவர்களால் 26–2–2014–ல் ரூ.34.75 கோடிக்கு இப்பணிக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிக்கான வேலைத்தளம் 25–11–2014 அன்று ஒப்படைக்கப்பட்டது. பாலப் பணிகளின் அனைத்து மேல் தள (Deck Slap) பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது சென்னை மார்க்கத்தில் அணுகு சாலை அமைக்கும் பணி, தடுப்புச் சுவர் மற்றும் சேவைச் சாலை அமைக்கும் பணிகள் முடிவுற்றன.

நண்பகல் 12–00

விழுப்புரம் மார்க்கத்தின் அணுகு சாலை மற்றும் சேவைச் சாலை அமைக்க 42 நபர்களிடமிருந்து 1411.00 சதுர மீட்டர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அப்பகுதிகளில் வலுவூட்டப்பட்ட தரைத்தள தடுப்புச் சுவர் (Reinforced Earth Wall) மற்றும் அணுகு சாலை அமைக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் விழுப்புரம் நகராட்சியின் பாதாளச் சாக்கடை குறுக்கிடுகிறது. இதனை மாற்றி அமைக்கும் பணி, விழுப்புரம் நகராட்சிமூலம் நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவடைந்தவுடன், விழுப்புரம் பகுதியில் அணுகு சாலை அமைக்கும் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு, விரைவில் பாலம் பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஈ) திருச்சி பால் பண்ணை–துவாக்குடி சேவைச் சாலை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதி, திருச்சி பால் பண்ணை துவாக்குடி சேவைச் சாலை திட்டம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சக்கரபாணி மற்றும் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் விதி 55–ன்கீழ் அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலமுறை இந்த அவையிலே என்னுடைய

2018 ஜூன் 14] [திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி]

*கன்னிப் பேச்சாக இருந்தாலும் சரி அல்லது கேள்வி நேரங்களாக இருந்தாலும் சரி, பல மானியக் கோரிக்கைகளில் நான் பேசுகின்ற வாய்ப்புக் கிடைக்கின்றபோதும் சரி, கவன ஈர்ப்பாக இருந்தாலும் சரி நான் இதுகுறித்து எழுப்பியிருக்கிறேன். அதேபோன்று அந்தத் துறை சம்பந்தமாக எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மானியக் கோரிக்கையிலே பேசும்பொழுது அவர்களிடமும் நான் பேசச் சொல்வது, என்னுடைய திருவெறும்பூர் தொகுதியில் பால் பண்ணையிலிருந்து துவாக்குடி வரை இருக்கின்ற சேவைச் சாலை–*service road *பற்றிதான். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு விபத்துகளிலே மரணம் அடைந்தவர்களுக்கு நிவாரணத் தொகைகளை வழங்குவது குறித்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள்.* Right to Information Act*–ன்படி பெறப்பட்ட தகவலின்படி மொத்தம் 14 கிலோ மீட்டர் தூரமுள்ள* stretch road*–ல், வெறும் 7 கிலோ மீட்டர் தூரமுள்ள* stretch road*–ல் மட்டும் 10 ஆண்டுகளில் ஏறத்தாழ 486 உயிர்கள் பலியாகியிருக்கின்றன. அதற்கான நிவாரண நிதிகூட நான் கேட்கவில்லை.* Service road *அமைப்பதில் அப்படி என்ன சிக்கல் இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.*

இதற்காக எத்தனை முறை நான் இங்கே வாதாடினாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இது குறித்த வழக்கு நிலுவையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். வழக்கு நிலுவையில் இருப்பது உண்மைதான். வழக்கு நிலுவையில் இருந்தாலும், அதற்கு interim order *வந்துவிட்டது.* Stay vacate *செய்ய சொல்லி* preliminary action *எடுங்கள்.* It will take some considerable time *என்று சொல்கிறார்கள். அந்த* preliminary action*–ஐக்கூட நாம் ஏன் இன்னும் எடுக்காமல் இருக்கிறோம். அது கிணற்றில் போட்ட கல்லாகவே இருக்கிறது.*

2011–ல் எங்களுடைய துணை முதலமைச்சர் மற்றும் எங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு. நேரு அவர்களுடைய முயற்சியின் காரணமாக ஒரு G.O. *வெளியிடப்பட்டது. அதற்குப்பின் அதற்குத் தேவையான நிதியும் ஒதுக்கப்பட்டுவிட்டது. ஆனால், இன்றைக்கு எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கிற அதே அனுபவம்தான் எனக்கும் இருக்கிறது. மக்களைப் பொறுத்தவரையில், 'நாங்கள் உங்களுக்கு அதற்காகத்தானே வாக்களித்து சட்டமன்ற உறுப்பினர் ஆக்கினோம்' என்று சொல்கிறார்கள்.* We are politicians. We are not magicians. *ஆனால்,*

[திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி] [2018 ஜூன் 14

உடனே செய்ய வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். புதிய திட்டத்தைக் கொடுங்கள் என்றுகூட நான் உங்களிடம் கேட்கவில்லை. ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டம். மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் இடையே இருக்கிற ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஏன் இன்னும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை என்றுதான் கேட்கிறோம்.

Interim order வந்துவிட்டதால் இடைக்காலத் தடையை நீக்கி preliminary action எடுத்தோம் என்று சொன்னால் மேம்பாலம் கட்டும் பணியைத் தொடரலாம். நேற்றைக்கு நான் எங்களுடைய செயல் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, எங்கள் கொறடா மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் interim order–ன் நகலை காண்பித்தேன். அதன் பிறகு உரிய துறை அதிகாரிகளிடம், C.M. Secretary–1, முன்னாள் ஆட்சியராக இருந்த திருமதி ஜெயஸ்ரீ ஆகியோரிடம் இதுகுறித்து discuss செய்தேன். அதைப் படித்துவிட்டு அவர்கள் preliminary action நாம் எடுக்கலாமே! ஏன் இன்னும் நாம் எடுக்காமல் இருக்கிறோம் என்று கேட்டார். 3D diagram முடிந்துவிட்டது. அதை publish செய்துவிட்டு, அடுத்து mark செய்கிற வேலையைத்தான் செய்யச் சொல்கிறார்கள். Demolish செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. Mark செய்கிற வேலையைச் செய்யலாம். இந்த நேரத்திலே என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த 2 அமைச்சர்கள் இருக்கிறார்கள். நான் அவர்களிடம் இதற்கு support செய்யுங்கள் என்று கேட்கிறேன். ‘நான் பலமுறை வாதாடிவிட்டேன். நீங்களும் ஆதரவாக கொஞ்சம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்’ என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று bureaucrats–இடம் நான் சொல்வதும் அதைத்தான். ‘மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பல வேலைகள் இருக்கலாம். நீங்கள் இதுபோன்ற கருத்துகளை அவரிடம் எடுத்துச் சொல்லுங்கள், at least preliminary action எடுக்கலாம் என்று சொல்லுங்கள்’ என்று சொன்னேன். நான் டெல்லி சென்று மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்களைப் போய் பார்த்தேன். எங்களுடைய செயல் தலைவர் அவர்களிடம் நான் மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்களைப் போய் பார்த்தேன் என்று சொன்னேன். தஞ்சாவூருக்கு பல முறை சென்றிருக்கிறேன். Zonal Office–க்கும் சென்றேன். இங்கேயிருக்கிற CGM

Office–க்கு என்னுடைய குடும்பத்தினருடன் இரண்டு முறை சென்று பார்த்திருக்கிறேன். ஏனென்றால், ஓட்டுக் கேட்கச் சென்றபோது, அந்தப் பிரச்சினை பற்றி எனக்குத் தெரியும். எத்தனை உயிர்கள் பலியாகி இருக்கின்றன என்று எனக்குத் தெரியும். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரான என்னுடைய உயிருக்குக்கூட ஆபத்து இருக்கிறது. அப்படிப்பட்ட அந்தச் சாலையை மரணச் சாலை என்று சொல்லிவிடுவார்கள். அந்த அளவிற்கு அந்தச் சாலை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நான் மிகவும் சங்கடப்பட்டு, வேதனைப்பட்டு சொல்கிறேன். ஒவ்வொரு முறையும் கூட்டத்தொடர் முடிந்து போகும்போது, என்னுடைய தொகுதி மக்கள் என்னிடம் கேட்கிற கேள்வி, 'என்னவாயிற்று? பேசிவிட்டீர்களா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து நல்ல பதில் வந்ததா?' என்று கேட்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சேலம் இல்லத்திற்குச் சென்று மக்கள் அவர்களுடைய கோரிக்கையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறதென்ற பதிலை ஒரே வரியில் சொல்லாமல், சட்டமன்ற உறுப்பினருக்காக, கண்டிப்பாக அடுத்தகட்ட நடவடிக்கையை, இதற்கான நல்ல தீர்வை, நாங்கள் மேற்கொள்வோம் என்கிற தகவலையாவது சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

Last year நவம்பர் மாதம் மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்களும், அதேமாதிரி நம்முடைய Hon'ble Chief Minister அவர்களும் discussion நடத்தியிருக்கிறார்கள். MoU–ல் 11–வது பாயிண்டோ அல்லது 13–வது பாயிண்டோ பார்த்தீர்கள் என்றால், முதலில் 45 metre ஆரம்பிக்கிறோம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும் உரையை நிறைவு செய்யுங்கள்.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: அதையாவது செய்து தர வேண்டுமென்று உங்கள் மூலமாக அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை 67–ல் கி.மீ.80/0 முதல் கி.மீ.136/490 வரை (தஞ்சாவூர் முதல் திருச்சிராப்பள்ளி வரை) நான்கு வழிச் சாலை அமைக்கும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டது. இச்சாலையில் துவாக்குடி முதல் பால்பண்ணை வரை 14.49 கி.மீ. நீளத்திற்கு சேவைச் சாலை அமைக்காததால் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு வந்தன.

அடிக்கடி ஏற்படும் விபத்துகளைத் தவிர்க்கும் வண்ணம், துவாக்குடி முதல் பால்பண்ணை வரை சேவைச் சாலை அமைக்கத் தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்தி, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் வழங்க தேவையான நில எடுப்புத் தொகை 84.50 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்புதலளித்து அரசாணை 29–8–2011–ல் மாநில அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், 60 மீட்டர் அளவிற்கு சேவைச் சாலை அமைப்பது அவசியம் என்பதால், நில எடுப்புப் பணிக்கு 196 கோடி ரூபாய் தேவைப்படும் எனத் தெரிவித்து, 60 மீட்டர் சேவைச் சாலை அமைக்க தேவைப்படும் நிலத்தைக் கையகப்படுத்த அறிவிக்கைகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை சட்டம், 1956, பிரிவுகள் 3(A) மற்றும் 3(B)–ன்படி வெளியிடப்பட்டன.

60 மீட்டர் அகலத்திற்கு சேவைச் சாலை அமைக்க சில அமைப்புகளின் எதிர்ப்பு மற்றும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்குகளைத் தொடர்ந்து, 25–1–2016 நாளிட்ட கடிதத்தில் மேற்கூறிய சாலையில், 60 மீட்டர் சேவைச் சாலைக்கு பதிலாக 45 மீட்டர் சேவைச் சாலை அமைக்க திருத்திய அறிவிக்கைகளை வெளியிடவும், நில எடுப்புப் பணிக்குத் தேவைப்படும் செலவினத்தில் 50 சதவிகிதத்தை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஆணையம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

சேவைச் சாலை அமைப்பதற்கு நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு உயர் நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய தடையாணை விலக்கப்பட்ட பிறகும், சேவைச் சாலை அமைய உள்ள பகுதிகளில் உள்ள கட்டடங்களை இடிக்க வழங்கப்பட்ட தடையாணை தொடர்வதன் காரணமாக, சேவைச் சாலை

2018 ஜூன் 14] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அமைக்கும் பணியினைத் தொடர இயலாத நிலை உள்ளது. இந்த வழக்கு 23–8–2016 அன்று இறுதியாக நீதிமன்றத்தில் வரப்பெற்று, தேதி குறிப்பிடாமல் இறுதித் தீர்ப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, நீதிமன்ற இறுதித் தீர்ப்பு பெற்ற பின்னரே நில எடுப்புப் பணி மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு நீண்ட நெடிய விளக்கத்தைச் சொன்னார்கள். 2006–ல் திராவிட முன்னேற்றக் கழகம் மத்தியில் கூட்டணி ஆட்சியில் இருந்தபோது அந்தச் சாலை அமைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது, ஏதோ மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வந்தபிறகுதான் அந்தச் சாலையை அமைத்த மாதிரியும், அதனால் பல உயிர்கள் போன மாதிரியும் இரக்கப்பட்டு பேசினார்கள். மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதையெல்லாம் கருத்தில்கொண்டுதான் ஒரு சாலை அமைக்கின்றபோது முதல் கட்டப் பணியான நிலத்தைக் கையகப்படுத்திய பிறகுதான் சாலை அமைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எங்களிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அதாவது தி.மு.க. ஆட்சியில் சாலை அமைக்கின்றபோது இதற்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்தி, சாலையை அமைத்திருந்தால், இவ்வளவு உயிர்கள் போயிருக்காது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீங்கள் 2006–ல் இந்தச் சாலையை அமைக்கின்றபோதே இது எவ்வளவு அகலம் இருக்க வேண்டும் என்பதையெல்லாம் கணக்கிட்டு, அதற்குத் தக்கவாறு சாலையை அமைத்திருந்தால், இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது. ஆகவே, உங்களுடைய காலத்தில், சரியான முறையில், இந்தச் சாலையை அமைக்காத காரணத்தினால்தான் இவ்வளவு பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. இது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்படுகின்ற பணி. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் அங்கே இருக்கின்ற மக்கள் வைக்கும் கோரிக்கைகளின் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகின்றது. அண்மையில் மத்திய தரைவழி போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள் இங்கே வந்தபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்தையெல்லாம் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்தப் பணியினை உடனடியாக

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 14

மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றேன். அதனை அவர்களும் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். மாநில அரசாங்கத்தினால் எந்தச் சுணக்கமும் இல்லை. இது மத்திய அரசு மேற்கொள்கின்ற பணி. இருந்தாலும் சாலையின் அகலத்தை 60 மீட்டர் அகலத்திலிருந்து 45 மீட்டர் அகலத்திற்குக் குறைக்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை வைத்திருக்கின்றோம். அப்படி இருந்தாலும்கூட நிறைய கடைகள் அடிபடுகின்றன. ஆகவே, 2006–ல் இந்தப் பணிகளை மேற்கொண்டபோது நீங்கள் அந்தச் சாலையை அகலமாக அமைத்திருந்தால், அங்கே புதியதாக கட்டடங்களைக் கட்டியிருக்கமாட்டார்கள். அதனால் அவற்றை இப்போது இடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. ஆகவே, அப்போது சாலைக்குத் தேவையான நிலத்தினை நீங்கள் கையகப்படுத்தாமல், ஒரு சாலைக்கு எவ்வளவு அகலம் வேண்டும் என்பதனைக் கணக்கிடாமல் சாலை அமைத்ததன் விளைவுதான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதனை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றீர்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மத்திய அரசிடம் இதனை வலியுறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கின்றது. ஆகவே இந்த சர்வீஸ் சாலையை அமைப்பதற்கு உண்டான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. தகவல் கோரல்—தொடர்ச்சி

(அ) ஸ்டெர்லைட் ஆலை குறித்து மதுரை உயர் நீதிமன்றத்தின் கருத்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், என்னவென்று சொல்லுங்கள். Zero hour –ல் கேட்பதாக, என்னவோ அவரைக் கேட்டீர்களே, அதைச் சொல்லுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்டெர்லைட் ஆலைப் பிரச்சினையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, அது இல்லை.